02.07.2026

<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்.</u>

<u>அசல் வழக்கு எண்.**182/2023**</u>

<u>பி.வா.சா. **1-**மகேஸ்ரவரன், த/பெ. சுப்ரமணி</u>

<u>சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது</u>

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

என்னுடைய நிலத்தில் பாதை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதி பாதை கேட்டு வழக்கு தாக்கல் செய்யவில்லை, வாதி ஏற்கனவே உள்ள பாதையை சென்றுவருவதை தடை செய்வதால் தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கில் வாதி தடையுத்தரவு பெற்றிருந்தாரா என்றால் பெற்றிருந்தார், ஆனால் பிறகு ஆவணங்கள் சமர்பித்து தடையுத்தரவு ரத்து செய்யப்பட்டது. நான் தவறாக சாட்சியம் அளிக்கின்றேன், நான் சொல்வது போன்று ஆவணங்களை சமர்ப்பித்து அதன் அடிப்படையில் இடைக்கால உத்தரவு செய்யப்பட்டது என்று சொல்வது தவறு, இடைக்கால உத்தரவை நீட்டிக்க முறையான மனு செய்யவில்லை என்றால் சரியல்ல. 15.07.2019-ம் தேதியன்று தான் என் தகப்பனாரிடமிருந்து நான் செட்டில்மெண்ட் எழுதி வாங்கினேன். சந்திரா என்பவர் தான் தாவா சொத்தை என் தகப்பனாருக்கு கிரையம் கொடுத்தார். 15.07.1994 ம் ஆண்டு தான் சந்திராவிடமிருந்து என் தகப்பனார் கிரையம் பெற்றார். சந்திரா மல்லமுத்துராஜாவிடமிருந்து கிரையம் வாங்கிய தேதி மாதம் நினைவில்லை, ஆண்டு 1991 ஆகும். அம்மாப்பட்டியிலிருந்து சொரத்தூருக்கு செல்லும் சாலை சர்வே எண்.198/12 ல் சென்றது என்று சொன்னால் சரிதான்.

மல்லமுத்து அவருடைய சொத்தை அனுபவம் செய்த காலத்திலிருந்து இந்த பாதை சர்வே எண்.198/12 ல் செல்கிறது என்று சொன்னால் சரிதான். சர்வே எண்.198/12 ல் உள்ள பாதை நான் குடியிருக்கும் பகுதியுடன் முடிவடைகிறது என்று சொன்னால் சரிதான்.

வா.சா.ஆ.7 புலவரைபடத்தில் கண்டவாறு சர்வே எண்.198/12 பழைய பாதை அமைந்துள்ளது என்று சொன்னால் சரியல்ல, தற்போது வயலாக மாற்றியுள்ளோம். இந்த பாதைக்கு மேல்புறத்தில் சர்வே எண்.198/8, 198/9, 198/10, 198/11 ஆகிய நிலங்கள் மல்லமுத்துராஜாவுக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான். இந்த பாதைக்கு கீழ்புறத்தில் சர்வே எண்.198/14, 198/15, 198/16 ஆகிய நிலங்கள் மல்லமுத்துராஜாவுக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான்.இந்த பாதை சர்வே எண்.198/12 நிலங்களுக்கு இடையே செல்வதால் கிராமத்து மக்கள் மல்லமுத்துவிடம் தெரிவித்து கீழ்புறம் ஒதுக்குபுறமாக தென்வடல் திசையில் செல்லுமாறு அமைக்கப்பட்டது என்று சொன்னால் தவறு. இந்த பாதை சொரத்தூருக்கு செல்வதற்கு கிழமேலாக சென்று தென்வடலாக மீண்டும் செல்கிறது என்று சொன்னால் வடபுறமாக பாதை உள்ளது. மல்லமுத்துராஜா காலத்திலேயே சர்வே எண்.198/14 என்ற நிலத்தை உட்பிரிவு செய்து புதிய சர்வே எண்.198/14 பி ஆக எண் வழங்கப்பட்டு, நிலவழிசாலைக்காக அரசாங்கம் இந்த சர்வே 198/14 பி நிலத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண்.198/14 பி மல்லமுத்துராஜா காலத்திலேயே

அரசாங்கத்தால் ஒப்படைக்கப்பட்டது, சர்வே எண்.198/14 பி நிலமானது எனது அனுபவத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. மல்லமுத்துராஜா அரசாங்கத்திடம் ஒப்படைக்கவில்லை, சந்திராவிடம் கிரையம் கொடுத்தார். நான் சாட்சியம் அளிப்பது போன்று சர்வே எண்.198/14 பி நிலத்தை சந்திராவுக்கு கிரையம் கொடுக்கவில்லை, மல்லமுத்துராஜா அரசாங்கத்திடம் தான் ஒப்படைத்தார் என்று சொன்னால் சரியல்ல.

சர்வே எண்.198/12 ல் இருந்த பழைய பாதை தற்போது நிலவியலில் இல்லை. சர்வே எண்.198/12 ல் இருந்து பாதையை மல்லமுத்துராஜா பாதையை அழித்து நிலமாக மாற்றிவிட்டார். சர்வே எண்.198/12 க்கு பிரதிபலனாக தான் சர்வே எண்.198/14 பி நிலத்தை மல்லமுத்துராஜா அரசாங்கத்திடம் கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல, மல்லமுத்துராஜா அரசாங்கத்திடம் ஒப்படைக்கவில்லை. நான் தவறாக சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண்.198/14 பி நிலவழி சாலைக்காக ஒப்படைக்கப்பட்டதாக கிராம அ பதிவேட்டில் குறிப்பு காணப்படுகிறது என்று சொன்னால் சரியல்ல. வாதி தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் சர்வே எண்.198/13 அரசாங்கத்தால் ஒப்படைக்கப்பட்டது என தகவல் பெற்றுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண்.198/14 பி உட்பிரிவு செய்யப்பட்ட பிறகு ஒருபோதும் சந்திராவோ, தகப்பனாரோ மல்லமுத்துவோ அனுபவம் செய்தது கிடையாது என்று சொன்னால் தவறு. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால்

சரியல்ல. சர்வே எண்.198/14 பி வழியாக தான் வாதிகள் நிலத்திற்கு செல்லக்கூடிய ஒரே பாதை என்று சொன்னால் தவறு. நான் தவறாக சாட்சியம் அளிக்கின்றேன், வாதிகளுக்கு தாவா பாதை ஒரே பாதை என்று சொன்னால் சரியல்ல, வாதிகளுக்கு வேறு பாதை உண்டு. வாதிக்கு வேறு பாதை கிடையாது, நான் தவறாக சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல, வேறு பாதை உண்டு. வாதிக்கு வேறு பாதை உண்டு என சொல்வதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. வாதியும், வாதிக்கு கிரையம் செய்து கொடுத்த கிரையபாத்தியஸ்தர்களும் தாவா பாதையை தான் பாதையாக பயன்படுத்தினார்கள் என்று சொன்னால் தவறு, நான் சொல்வது தான் தவறு என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண்.198/14 பி ஏற்கனவே மல்லமுத்துராஜா பேரில் பட்டா இருந்தது என்று சொன்னால் சரிதான். நிலவழி சாலைக்காக சர்வே எண்.198/14 பி அரசாங்கத்தால் கையகப்படுத்திய பிறகும் மல்லமுத்துராஜாவின் பெயரில் தான் பட்டா இருந்தது என்று சொன்னால் சர்வே எண்.198/14 பி அரசாங்கம் கையகப்படுத்தவேயில்லை. மல்லமுத்துராஜா பெயரில் சர்வே எண்.198/14 பி இருந்த பட்டாவை நான் மோசடியாக மாற்றினேன் என்று சொன்னால் சரியல்ல. சந்திரா கிரையம் பெற்று எங்களுக்கு கிரையம் கொடுத்தார்கள், அதன் அடிப்படையில் பட்டா மாற்றினோம். அவ்வாறு நான் சர்வே எண்.198/14 பி க்கு பட்டா மாற்றிக்கொண்டது தவறு என்று சொன்னால் சரியல்ல. அது தான் சரி. சர்வே எண்.198/14 பி நிலத்தை சந்திரா தன் பெயருககு பட்டா மாற்றிக்கொள்ளவில்லை, நாங்கள் தான் பட்டாவை எங்கள்

பெயரில் மாற்றிக்கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண்.198/14 பி மல்லமுத்துராஜா அரசாங்கத்தில் ஒப்படைத்துவிட்டதால் எனக்கு எந்த உரிமையும் அனுபவம் இல்லை என்று சொன்னால் சரியல்ல, தற்போது வரை நாங்கள்தான் அனுபவம் செய்து வருகிறோம். நான் தவறாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண்.198/14 பி நிலத்திற்கு கீழ்புறம் சர்வே எண்.198/14 சி என்ற புறம்போக்கு நிலத்தை நான் என் பெயரில் பட்டா மாற்றிக்கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல, சந்திராவிடமிருந்து பெற்ற கிரையத்தின் அடிப்படையில் தான் பட்டா மாற்றினேன். வாதி 20.11.2020 குணசேகரனிடமிருந்து பெற்ற நிலத்திற்கு தாவா பாதை வழியாக தான் அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் தவறு. இந்த குணசேகரனின் சகோதரர் தங்கராசு, சீனிவாசன், மல்லமுத்து மகன் தங்கராஜ் 31.08.1983 ம் தேதி கிரையம் பெற்ற ஆவணத்திலேயே இந்த தாவா பாதையில் பாத்தியம் உண்டு என கண்டு எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல, நான்கெல்லை விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த கிரையம் 31.08.1983 படி தான் தாவா பாதையை அவர்கள் பயன்படுத்தினார்கள் என்று சொன்னால் சரியல்ல. சீனிவாசன் என்பவர் எழுதிக்கொடுத்த கிரையாவணம் தாவா பாதையை வைத்து தான் எழுதிக்கொடுத்தார் என்று சொன்னால் தவறு. நான் தவறாக சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல.

சர்வே எண்.198/14 பி-ல் உள்ள தார்சாலை 20 அடி அகலம் கொண்டது என்று சொன்னால் தவறு. நான் சொல்வது தான் தவறு, இந்த தார்சாலை வழியாக வண்டி செல்கிறது என்று சொன்னால் தவறு. 19.08.1991 ம் தேதி சந்திராவுக்கு மல்லமுத்து வகையறா எழுதிக்கொடுத்த கிரயாவணத்திலேயே கிழமேல் போகும் வண்டி பாதைக்கு வடக்கு என நான்கெல்லை விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் தவறு. என் தகப்பனார் சந்திராவிடம் கிரையம் வாங்கிய சொத்திற்கு ஆவணமான பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் நான்கெல்லை விவரம் காட்டவில்லை என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் மாமூல் பாதை பாத்தியம் என்று தான் எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் நான்கெல்லை விவரத்தில் சர்வே எண்.198/14 பி என்ற நிலத்தை காண்பித்திருந்தால் உரிமை வராது என்பதால் தான் வேண்டுமென்றே அவ்வாறு குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். மல்லமுத்துவோ, என் தகப்பனாரோ, சந்திராவோ அனுபவம் செய்திருந்தால் தாவா சொத்து சர்வே எண்.198/14 பி ஐ நான்கெல்லை விவரத்தில் சொல்லியிருப்பார்கள், அவர்கள் அனுபவம் செய்திருந்தால் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் நான்கெல்லை விவரத்தில் சொல்லியிருப்பார்கள் என்று சொன்னால் தவறு. நான் தவறாக சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண்.198/14 பி என்பவது கரடு முரடான விவயாத்து ஏற்ற நிலம் அல்ல என்று சொன்னால் சரியல்ல, விவசாயம் செய்யலாம், ஓரமாக உள்ளதால் குப்பை கொட்டி வருகிறேன்.

நான் தவறாக சாட்சியம் அளிக்கின்றேன், தாவா சொத்து சர்வே எண்.198/14 பி-ல் விவசாயம் செய்ய முடியாது என்று சொன்னால் சரியல்ல. நான் முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளவாறு நான் ஏற்கனவே சோளம் பயிர் விவசாயம் செய்து வருவது என்று சொல்வது தற்போது குப்பை கொட்டி வருவரு என்று சொல்வது தவறு என்று சொன்னால் சரியல்ல, நான் தவறாக சாட்சியம் அளிக்கின்றேன். தாவா சர்வே எண்.198/14 பி-ல் பாதை வழியாக தான் வாதி சென்று வந்து கொண்டுள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கில் புதிய நபர்களை தரப்பினராக சேர்க்க வேண்டி தாக்கல் செய்த மனுக்களில் புதிய நபர்களை சேர்க்க வேண்டிய அவசியமில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்திற்கு பட்டாவை தவிர உரிமைமூல ஆவணங்கள் கிடையாது என்று சொன்னால் சரியல்ல, பத்திரம் உள்ளது. வா.சா.ஆ.11 10.01.2014 ம் தேதியிட்ட கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சான்று, தாவா இடத்தை பார்வையிட வழங்கப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல, நேரில் வந்து பார்வையிட்டு ஆய்வு செய்து வழங்கப்பட்ட ஆவணமாகும். வா.சா.ஆ.12 புகைப்படம் இவ்வழக்கிற்கு சம்மந்தப்பட்ட ஆவணம் அல்ல என்று சொன்னால் சரியல்ல. சிறுகுறு விவசாய சான்றிதழில் தாவா சர்வே எண் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல, அவ்வாறு பெறப்பட்ட சிறுகுறு விவசாய சான்றிதழ் மோசடியாக பெற்றப்பட்ட ஆவணம் என்று சொன்னால் தவறு. முறைப்படி ஆவணம் வைத்து பெறப்பட்ட ஆவணமாகும். வாதி ரமேஷ் தாவா கிராமத்திற்கு

அந்நிய ஊரை சார்ந்தவர். வாதி வெளியூர்க்காரர், தாவா சொத்தை கிரையம் வாங்கியுள்ள பொறாமையால் வாதி தாவா பாதை அனுபவத்தை சென்று வருவதை தடைசெய்தீர்கள் என்று சொன்னால் தவறு. தற்போது வரை வாதி தாவா பாதையை தான் பாதையாக பயன்படுத்தி வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. வாதி தாக்கல் செய்த ஆவணங்களின்அடிப்படையில் தாவா பாதையில் செல்ல வாதிக்கு உரிமையுண்டு என்று சொன்னால் தவறு. இவ்வழக்கில் என் தந்தைக்கு தாவா சொத்தை கிரையம் கொடுத்த சந்திரா வாதி ரமேஷ்க்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ளார் என்று சொன்னால் சரிதான். ஆனால் வழக்கைப்பற்றி தெரியாது, என் கணவருக்கு தான் தெரியும் என்று சொல்லியுள்ளார். அவ்வாறு சந்திரா தாவா சொத்தை வாதி அனுபவம் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது, என் கணவருக்கு தான் தெரியும் என்று சொல்லியுள்ளார், நான் தவறாக சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல.

/உண்மை நகல்/
ஒம்/-திரு.தி. அன்பு,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
துறையூர்.